யாழ்நகரில்
தரமான
A/L
விஞ்ஞானக் கல்விக்கு
என்றும்
New Master
Institute
B.M.C. Lane, JAFFNA.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை – அஞ்சாமை – நடுநிலைமை

A/L 88
விஞ்ஞான
வகுப்புக்கள்
Iம், IIம் பிரிவுகள்
நடைபெறுகின்றன
IIIம் பிரிவு
ஆரம்பமாகின்றது
விபரங்கட்கு:
New Master
Institute
B.M.C. Lane, JAFFNA.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு ஆனி மீ 30 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1406 ஷவ்வால் பிறை 6 (14-07-1986) UTHAYAN- A LIVELY TAMIL DAILY கதிர்:- 203

# போராளி அமைப்புகள் நேரடிப் பேச்சுக்கு டில்லியில் நிபந்தனை

முச்சந்தி முருகர்



நேற்றைய ஆர்ப்பாட்டப் பேரணியின்போது எடுக்கப்பட்ட படங்கள்

## தலைவர்கள் திட்டவட்டமாக அதிகாரிகளிடம் அறிவிப்பு

புதுடில்லி, ஜூலை 13

இலங்கை அரசுடன் நேரடிப் பேச்சுக்கள் நடத்த ஐந்து தமிழ்ப் போராளிகள் அமைப்புக்களும் நிபந்தனை விதித்துள்ளன.

அந்த நிபந்தனையை புதுடில்லியில் வைத்து இந்திய அரசு அதிகாரிகளிடம் ஐந்து போராளிக் குழுக்களின் தலைவர்களும் நேரடியாக, திட்டவட்டமாக அறிவித்து விட்டனர்.

திம்பு மாநாட்டில் தமிழர் அமைப்புக்கள் சமர்ப்பித்த 4 அம்சக் கோரிக்கைகளின் அடிப்படையில் பேச்சுக்களை நடத்த இலங்கை அரசு முன் வந்தால் அதனுடன் நேரடிப் பேச்சுக்களை நடத்தத் தயார்.

போராளிகளின் அமைப்புக்களின் தலைவர்கள் புதுடில்லியில் இந்திய அரசு அதிகாரிகளிடம் சமர்ப்பித்துள்ள நிபந்தனை இதுவேயாகும்.

கடந்த சனிக்கிழமை புதுடில்லியில் போராளிகளின் தலைவர்கள்; கொள்கை ஆலோசனைக் கமிட்டித் தலைவர் திரு. ஜி. பார்த்தசாரதி, வெளியுறவுச் செயலாளர் திரு. ஏ. பி. வெங்கடேஸ்வரன் ஆகியோரைச் சந்தித்தனர்.

அப்போதே இந்த நிபந்தனையை அவர்கள் இந்திய அதிகாரிகளிடம் திட்டவட்டமாகத் தெரிவித்தனர்.

வேறு எந்த வகையிலும் இலங்கை அரசுடன் பேச முடியாது என்றும் அவர்கள் இந்திய அரசுக்கு அறிவித்தனர்.

இந்திய அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்திய போராளித் தலைவர்கள் விவரம் வருமாறு:

1. வே. பிரபாகரன் (தமிழீழ விடுதலைப் புலிகள்.)

2. உமாமகேஸ்வரன் (தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்).

3. பாலகுமார் (ஈழப்

(4 ஆம் பக்கம் பார்க்க)



தமிழ்ப் பகுதிகளில் இருக்கிற கோயில்களை சுடுகாடுகள் ஆக்கிறதென்று உலவயன் கங்கணம் கட்டிவிட்டினமோ பிள்ளை ...!

## பிள்ளையார் கோயிலில் எரிந்த நிலையில் சடலம்

திருகோணமலை ஜூலை 14

திருகோணமலை நகரில் கம்பனிப் பிள்ளையார் கோயிலில் எரிந்த நிலையில் சனிக்கிழமை காணப்பட்ட சடலம், அரச ஊழியரான வே. தியாகராசா என்பவருடையது என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

மரண விசாரணை திருமலை பதில் நீதிவான் திரு. எம். வே. செல்லராசாவினால் நடத்தப்பட்டது.

அடையாளம் காணப்படாத நிலையில் அச்சடலம் அந்த இடத்திலேயே புதைக்கப்பட்டது.

அரச ஊழியரான திரு. தியாகராசாவினுடைய சடலம் அது என்று இப்பொழுது தெரியவந்துள்ளது.

கடந்த இரண்டு தினங்களாக அவரைக் காணவில்லை என்று கூறப்படுகிறது.

'கேர்னல் தியாகராசா' என்று இவர் செல்லமாக திருமலை நகரில் அழைக்கப்பட்டு வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(உ - எ - 150)

## எமது நிலைப்பாட்டை அம்சம் அம்சமாக விளக்கினோம்

### அமிர் தகவல்

கொழும்பு, ஜூலை 14

இலங்கை அரசாங்கத்தின் யோசனைகள் குறித்த எமது நிலைப்பாட்டை ஒவ்வோர் அம்சம் அம்சமாக விளக்கினோம்.

இவ்வாறு கூட்டணியின் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம், நேற்று நடந்த முதற்கட்டப் பேச்சின் பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பேச்சுக்களின் முடிவில் செய்தியாளர்கள் திரு அமிர்தலிங்கத்தைச் சந்தித்தனர்.

செய்தியாளர்கள் திரு. அமிர்தலிங்கத்திடம் கேட்ட கேள்விகளும் அவற்றுக்கு அவர் கொடுத்த பதில்களும் இங்கே தொகுத்துத் தரப்படுகின்றன.

கேள்வி: பேச்சுக்கள் எப்படி இருந்தன?

அமிர்: ஒன்றுமே என்னால் கூறமுடியாது.

கேள்வி: உங்கள் அடிப்படைக் கோரிக்கைகளை வலியுறுத்தினீர்களா?

அமிர்: இலங்கை அரசின் யோசனைகள் குறித்த எமது நிலைப்பாட்டை ஒவ்வோர் அம்சம் அம்சமாக விளக்கினோம்.

எமது மாற்று யோசனைகளின் அடிப்படைக் கோரிக்கைகளை மையமாக வைத்தே நாம் இலங்கை யோசனைகள் குறித்து எமது விளக்கங்க

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அரசுக்கு அரசியல் உறுதி தேவை

### அமைச்சர் சிவ்சங்கர் கருத்து

சென்னை, ஜூலை 13

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண திட்டவட்டமான அரசியல் உறுதியுடன் இலங்கை அரசு செயல்படவேண்டும்.

இப்படி இந்திய வெளியுறவு, வர்த்தக அமைச்சர் திரு பி. சிவ்சங்கர் சென்னையில் செய்தியாளர்கள் மத்தியில் தெரிவித்தார்.

இலங்கையின் பிந்திய யோசனைகள், அடிப்படை ஆலோசனையே. இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தனாவே கூறியிருக்கிறார்.

இதன் அடிப்படையில் கூட்டணி பேச்சுக்களை நடத்துகிறது. இப்பேச்சுக்களின் போது கூடுதலான சலுகைகளை இலங்கை அரசு அறிவிக்கக்கூடும்.

—இப்படி திரு. சிவ்சங்கர் நம்பிக்கை தெரிவித்தார். (உ-எ)

### சுபநேரம்

14–07–1986
திங்கட்கிழமை
சுபநேரம்:-
13 00 முதல் 1 30 வரை
ராகுகாலம்:-
7 30 முதல் 9 00 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## அரசு--கூட்டணி பேச்சில் பங்குபற்றியோர்

கொழும்பு, ஜூலை 14

நேற்று நடைபெற்ற இலங்கை அரசு—தமிழர் விடுதலைக் கூட்டணிப் பேச்சுவார்த்தைகளின் போது அரச தரப்பிற்கு ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனவும், கூட்டணித் தரப்பிற்குச் செயலாளர் நாயகம் திரு அ. அமிர்தலிங்கமும் தலைமை வகித்தனர்.

அரச தரப்பில் அமைச்சர்கள் லலித் அத்துலத்முதலி, ரனில் விக்கிரமசிங்க ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அரசியல் கட்சி மாநாட்டுச் செயலாளர் பீலிக்ஸ் அபேசிங்காவும் சமுகம் அளித்து இருந்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணிக் குழுவில் திரு அ. அமிர்தலிங்கத்துடன் திரு எம். சிவசிதம்பரம்,

(4 ஆம் பக்கம் பார்க்க)

மாகாண சபைகளை எதிர்த்து

## ஆறுமைல் தூரத்துக்கு ஆயிரக்கணக்கில் மக்கள் கலந்துகொண்ட பேரணி

— உதயன் அலுவலகச் செய்தியாளர் —

யாழ்ப்பாணம், ஜூலை 14

அரசியல் கட்சிகளின் மாநாட்டையும், மாகாண சபை யோசனையையும் எதிர்த்து நேற்று யாழ்ப்பாணத்தில் பிரமாண்டமான ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெற்றது.

மக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் பேரணியில் 5 விடுதலைப் போராளிகள் அமைப்புகளும் கலந்து கொண்டன.

இந்தப் பேரணி காலை சுமார் பதினொரு மணியளவில் மருதனமடம் சந்தியில் இருந்து புறப்பட்டு காங்கேசன்துறை வீதி வழியாக நாச்சிமார் கோயிலடியை அடைந்து பின்னர் யாழ். பல்கலைக் கழகத்தை யாழ் இரண்டு மணி அளவில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 14

கிளிநொச்சியில் நேற்று நிகழ்ந்த மோதல்களின் போது பெருமளவு ரவைகளும், ரவைச் சங்கிலிகளும், கோட்டாச் ஷெல்களும் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டன.

இது தொடர்பாக புலிகள் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கிளிநொச்சியில் ரோந்து செல்ல முனைந்த இராணுவத்தினர் மீது எமது இடக்கத்தவர்கள் மூன்றரை மணி நேரம் தாக்குதல் நடத்தினர்.

வானத் தாக்குதல்களுக்கு மத்தியில் எம் நடத்திய தாக்குதலினால் தாக்குதல் நடத்திய ஹெலிகளும், பொம்மர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் ராணுவம் மீது புலிகள் கடும் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூலை 14

மன்னார் அடம்பனில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முகாம் ஒன்றை முற்றுகையிட இராணுவம் எடுத்த முயற்சியை விடுதலைப் புலிகள் முறியடித்தனர்.

அங்கு இராணுவத்தினர் மீது புலிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்திவருகின்றனர்.

இது தொடர்பாக விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தள்ளாடி இராணுவ முகாமில் இருந்து நடைபவனியாகவும், 8 கவச வாகனங்களிலும் வேறு சில வாகனங்களிலும் வந்த 300க்கும் அதிகமான இராணுவத்தினர் அடம்பனில் உள்ள எமது முகாமை நேற்றுக்காலை 6 மணியளவில் முற்றுகையிட முனைந்தனர்.

இம் முற்றுகை முயற்சி எம்மால் முறியடிக்கப்பட்டது.

இம்முற்றுகை முறியடிப்பதற்காக பெரிய அளவிலான தாக்குதல்கள் எம்மால் தொடர்ந்து வண்ணம் உள்ளன.

இராணுவத்தினருக்கு உதவியாக 2 ஹெலிக்கொப்டர்களும், 2 பொம்மர் விமானங்களும், கடல் விமானம் ஒன்றும் வந்து குண்டுகளைப் பொழிந்தன.

இதன் மத்தியிலும் எமது வீரர்கள் எம்மை முற்றுகையிட வந்தோரை சுற்றி வளைத்து கடுமையான பதில் அடி கொடுக்கத் தொடங்கினர்.

இதன்போது இவர்களுக்கு உதவியாக ஒரு ஹெலிக்கொப்டர் தரையிறங்க முயற்சித்த சமயம் எமது வீரர்கள் ரொக்கட் லோஞ்சர் மூலம் தாக்கியதில் அது உட

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரக் கட்சி நிராகரிப்பு; ஏகமனதாகத் தீர்மானம்

கொழும்பு, ஜூலை 14

இலங்கை அரசு சமர்ப்பித்துள்ள மாகாண சபை யோசனைகளைச் சுதந்திரக் கட்சியின் காரியக்கமிட்டி ஏகமனதாக நிராகரித்து விட்டது.

நாளை செவ்வாய்க்கிழமை மீண்டும் ஆரம்பமாகும் அரசியல் கட்சிகள் மாநாட்டில் பங்குபற்றுவதில்லை என்றும் காரியக்கமிட்டி முடிவெடுத்துள்ளது.

இத்தீர்மானங்கள் நேற்று மாலை நடந்த 400 உறுப்பினர்கள் கொண்ட காரியக்கமிட்டிக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

இலங்கை அரசு அரசியல் கட்சிகள் மாநாட்டில் சமர்ப்பித்த யோசனைகள் வேறு; இந்தியாவிடம் சமர்ப்பித்த யோசனைகள் வேறு.

இதன்மூலம் இலங்கைப் பிரஜைகளை மட்டும் இலங்கை அரசு ஏமாற்ற முயற்சிக்கவில்லை; இந்தியப் பிரதமரையும்கூட ஏமாற்ற முயற்சி செய்துள்ளது.

இப்படி அத்தீர்மானத்தில் மேலும் கூறப்பட்டுள்ளது.

காரியக்கமிட்டியின் தீர்மானங்கள் இன்று நடைபெறும் கட்சியின் மத்திய குழுவின் அங்கீகாரத்துக்குச் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றன

(அ - எ)

## பேச்சின் முன்னேற்றத்தை பொறுத்தே ஏனைய கட்சிகளை கூட்டணி சந்திக்கும்

கொழும்பு, ஜூலை 14

அரசுடனான பேச்சுக்களில் ஏற்படும் முன்னேற்றத்தைப் பொறுத்துத்தான் ஏனைய அரசியல் கட்சிகளின் அபிப்பிராயங்களைப் பெறுவதில் தமிழர் விடுதலைக் கூட்டணி அக்கறை செலுத்தும்.

இப்படி கூட்டணிச் செயலதிபர் திரு அ. அமிர்தலிங்கம் உதயனுக்கு நேற்றுத் தெரிவித்தார்.

நேற்று அரசுடனான முதற்கட்டப்பேச்சுக்களின் பின்னர் திரு. அமிர்தலிங்கத்தை உதயன் செய்தியாளர் பேட்டி கண்டார்.

பேச்சுக்கள் எப்படி

(4 ஆம் பக்கம் பார்க்க)



ஆர்ப்பாட்டப் பேரணியில் கோஷமிட்டுச் செல்லும் பெண்கள்

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டைதீவு ஆஸ்பத்திரி இன்னும் மூடப்பட்ட நிலையில்

மண்டைதீவு, ஜுலை 14
மண்டைதீவு அரசினர் ஆஸ்பத்திரி கடந்த பல நாட்களாக மூடப்பட்டுக் கிடக்கிறது.

கடந்த ஜுன் 11ஆம் திகதியிலிருந்து இந்த ஆஸ்பத்திரி மூடப்பட்டுக் கிடக்கிறது.

இங்குள்ள வைத்திய அதிகாரி உட்பட சகல உத்தியோகத்தர்களும் ஆஸ்பத்திரியை மூடிவிட்டு வெளியேறிவிட்டனர்.

தற்பொழுது மக்கள் மீண்டும் தமது வீடுகளுக்குத் திரும்பிக்கொண்டிருப்பதால் ஆஸ்பத்திரி மீண்டும் திறக்கப்பட வேண்டும் என்று இப்பகுதிப் பொதுமக்கள் கோருகிறார்கள்.

இங்கு கடமையாற்றிய வைத்திய அதிகாரி தற்பொழுது வேறொரு இடத்தில் உள்ள வைத்தியசாலையில் தற்காலிகமாகக் கடமையாற்றி வருகின்றார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(இ-88)

## 75 பேர் பூஸாவுக்கு

மட்டக்களப்பு, ஜுலை 14
மட்டக்களப்புப் பகுதியில் ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழர்களில் சுமார் 75 பேர் வரையில் பூஸாவுக்கு சனியன்று அனுப்பி வைக்கப்பட்டனர். (உ-எ-21)

## "நாங்கள் வந்த நோக்கம்" - அமிர்

கொழும்பு, ஜுலை 14
இலங்கை அரசின் புதிய யோசனைகளின் அடிப்படையில் தீர்வு காண முடியுமா?

அத்தீர்வில் இலங்கைத் தமிழர் அமைதியுடன் சுதந்திரத்துடன் வாழ முடியுமா?

இவற்றைக் கண்டறியவே நாம் இலங்கை வந்துள்ளோம்.

இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் கடந்த சனிக்கிழமை தெரிவித்தார்.

திரு. அமிர்தலிங்கம் மேலும் சொன்னதாவது;

ஏதாவது ஒரு கட்டத்தில் தமிழ்ப் போராளிகளும் மறைமுகமாகவோ நேரடியாகவோ இப்பேச்சுக்களில் ஈடுபடுத்தப்பட வேண்டும்.

இப்படி அவர் சொன்னார். (இ-எ)



இன்றைய நிலைமை நீடித்தால்

# எதிர்காலப் பரம்பரையினரின் உணர்வுகள் பாதிப்புறும்

### தீவுப்பகுதி அபிவிருத்திக் கழக அங்குரார்ப்பணக் கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம், ஜுலை. 14
இன்று இலங்கையில் இடம்பெறும் தமிழர்களின் உயிர் உடைமைகள் பறிக்கப்படும் நிலையும் நிலம் துண்டாடப்படும் அவலமும் எமது எதிர்காலப் பரம்பரையின் உணர்வுகளை பாதிப்பனவாக உள்ளன.

தீவுப்பகுதி அபிவிருத்திக் கழக அங்குரார்ப்பணக் கூட்டத்தில் தலைமையுரை ஆற்றிய யாழ். பல்கலைக்கழக புவியியல் துறைத் தலைவர் கலாநிதி எஸ். பாலச்சந்திரன் இவ்வாறு குறிப்பிட்டார்.

சட்டத்தரணி திரு. பி. கதிரவேலுவின் மங்கள உரையுடன் கூட்டம் ஆரம்பமானது.

கலாநிதி. பாலச்சந்திரன் தனது தலைமையுரையில் தொடர்ந்து கூறியதாவது:-

தீவுப்பகுதியில் ஆசிரியர்கள் வேலை செய்யத் தயங்குவது கவலை தருகிறது. பிறமாவட்டங்களில் பல கஷ்டங்களுக்கு மத்தியில் பல ஆசிரியர்கள் வேலை செய்யும் போது, இங்கு வேலை செய்யத் தமிழ் ஆசிரியர்கள் மறுத்தால் எமது சமுதாயம் எப்படி முன்னேறும்—என்றும் கூறினார்.

அடுத்துப் பேசிய வவுனியா தவித் திட்டமிடல் பணிப்பாளர் திரு. எஸ் செந்திவேல் பேசுகையில்; யாழ். குடாநாட்டில் மிகவும் வறுமையான பிரதேசம் தீவுப்பகுதி.

தீவுப்பகுதியைச் சூழ்ந்து கடலிருந்தும் 14 வீதமானோரே மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றார்கள். இதனால் கடல்வளம் முற்றாகப் பயன்படுத்தப்படவில்லை.

தீவுப்பகுதி செல்வந்தர்கள், வர்த்தகர்கள், கடற்றொழில் போன்ற துறைகளில் மறுமுதலீடு செய்ய முன்வரல் வேண்டும் என்றார்.

தீவுப்பகுதி மக்கள் தமது உணவுத் தேவைகளைப் பூர்த்திசெய்யத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.— என்று சிரேஷ்ட உதவி சமநல சேவை ஆணையாளர் திரு. ச. பரமலிங்கம் குறிப்பிட்டார்.

"தீவுப்பகுதியில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நிதியில்லாத நிலையில் முதலீடு இல்லாத நிலையில் செயற்படுகின்றன.' — என்று புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தலைவர் திரு. எஸ். கருணாகரன் குறிப்பிட்டார்.

அனலைதீவு அபிவிருத்திச் சங்க உபதலைவர் திரு. ஐ செல்லையா அனலைதீவுக்கு புங்குடுதீவிலிருந்து படகுமூலம் உணவுப் பொருள்களை அனுப்பிவைக்க வேண்டுமென்றார்.

அடுத்துப்பேசிய கவிஞர் சு. வில்வரத்தினம், கிளிநொச்சி போன்ற பல மாவட்டங்களில் இருந்து தீவுப்பகுதிக்கு குடிபெயர்ந்துள்ள மக்களின் புனர்வாழ்வு திட்டமிடப்பட வேண்டும்.

நெருக்கடி நிலைமை உணர்ந்து இனியும் நகர்ப்புறங்களில் தங்கியிருக்கும் நிலையைத் தவிர்க்கத் தீவுப்பகுதி மக்கள் முன்வரல் வேண்டும் என்றார். (இ-9)

"கற்பகம்" சஞ்சிகையின் பனை அபிவிருத்திச் சபையால் நடத்தப்பட்ட 'கல்லாக்காரம்' கவிதைப்போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசுத்தொகைகளைச் சபை இயக்குனர் சிவதர்மவள்ளல் திரு. க கனகராசா ஜே பி. வடமாகாண தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சமாஜப் பொது முகாமையாளர் திரு. ஆ. ந. இராசேந்திரனிடம் வழங்குவதையும் நடுவில் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு க. நடராசா நிற்பதையும் முதல் படத்திலும் —
சபையினால் உற்பத்தி செய்யப்பட்ட பனந்தும்பு பிரஷ் விற்பனையை ஆரம்பித்து வைப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். (உ)

உத்தேச மாகாண சபைகள்:

## சுதந்திரக் கட்சி மாற்றுயோசனை சமர்ப்பிக்கும்

கொழும்பு, ஜுலை. 14
சுதந்திரக்கட்சி மாற்று யோசனைகளைச் சமர்ப்பிக்கவிருக்கிறது.

அரசின் மாகாண யோசனைகளுக்கு பதிலாகவே இந்த மாற்று யோசனையை சமர்ப்பிக்க சுதந்திரக் கட்சித் தலைமைப் பீடம் முடிவு எடுத்து உள்ளது.

இப்படி கொழும்பு சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அரசின் மாகாண சபை யோசனைகள் பிரிவினையைத் கொண்டு வரும்; தேவைக்கு மேலான அதிகாரங்களை வழங்குவதாக உள்ளன.

இப்படி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஏற்கனவே கூறி விட்டது தெரிந்ததே. (இ-எ)


விமானச்சீட்டுக்கள், பாஸ்போர்ட்
பொண்ட், விசா, ரெலக்ஸ்

CONFIRMATION RE-CONFIRMATION

தொலைபேசிச் சேவை ;
23364, 23866

நிப்பொன் ரெலி ரவல்ஸ்
2G, ஸ்ரான்லி வீதி,
கஸ்தூரியார் . ஸ்ரான்லி வீதிச் சந்தி,
யாழ்ப்பாணம்.


## நினைவுக் கட்டுரைப் போட்டி.

அமரர் க. சண்முகம் நினைவாக ஆண்டுதோறும் கட்டுரைப் போட்டி நடத்தி மாணவர்கள் மத்தியில் சிந்தனையைத் தூண்டி, அவர்களின் எழுத்தாற்றலை வளர்ப்பது எமது நோக்கம்.

இந்த வரிசையில் இடம்பெறும் முதலாவது போட்டி இது.

பாடசாலை மாணவர்களுக்கான இப்போட்டி, பின்வரும் மூன்று நிலைகளில் நடைபெறும்.

* ஆரம்ப பிரிவு :- 6ம், 7ம், 8ம் வகுப்புகள்
* இடைநிலைப்பிரிவு:- 9ம்,10ம் வகுப்புகள்
* உயர்தர பிரிவு: க. பொ. த. உயர்தர வகுப்பு.

கட்டுரைப் போட்டிக்குரிய தலைப்புகள் வருமாறு:-

ஆரம்ப பிரிவு :-
"அன்றாட வாழ்க்கையில் சமயம்"

இடை நிலைப்பிரிவு:-
"சமயமும் அறிவியலும்"

உயர்தர பிரிவு:-
"சமயம் காட்டும் அன்புநெறி"

ஆரம்ப பிரிவினர் புல்ஸ்காப் தாளில் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமலும், இடைநிலைப் பிரிவினர் மூன்று பக்கங்களுக்கு மேற்படாமலும் உயர்தரப் பிரிவினர் நான்கு பக்கங்களுக்கு மேற்படாமலும் கட்டுரைகளை எழுதும்படி வேண்டப்படுகின்றனர்.

ஒரு மாணவன் ஒரு கட்டுரை மட்டுமே போட்டிக்கு அனுப்பலாம். அதுவும் அவரது சொந்தப் படைப்பாக இருத்தல் அவசியம்.

கட்டுரையைப் போட்டிக்கு அனுப்பும்போது பாடசாலை அதிபரின் உறுதியுரை இணைக்கப்படல் வேண்டும். கட்டுரையாளர் தமது பாடசாலை மாணவன் என்பதையும், கட்டுரை மாணவனது சொந்தப் படைப்பு என்பதையும் அதிபர் தமது உறுதியுரையில் தெளிவுபடுத்துவது முக்கியம்.
இப்போட்டியின் நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது.

உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிடெட், நிறுவனத்தின் ஊழியர்கள், அவர்களின் குடும்பத்தினர் ஆகியோர் இப்போட்டியில் பங்கு பெற முடியாது.

கட்டுரைகளை அனுப்பும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "அமரர் சண்முகம் நினைவுக் கட்டுரைப் போட்டி" என்று குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

போட்டி முடிவு நாள்:- 27 - 07 - 1986.

அனுப்பவேண்டியமுகவரி-
பொறுப்பாளர்,
அமரர் சண்முகம் நினைவுக்
கட்டுரைப் போட்டி,
மே/பா சஞ்சீவி,
த. பெ. எண்: 23,
யாழ்ப்பாணம்

பரிசுகள்:

ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனியே வழங்கப்படவுள்ள 3 பரிசுகளின் விவரங்கள் வருமாறு:-

| | | |
|---|---|---|
| முதற்பரிசு | — | ரூபா. 500/- |
| இரண்டாவது பரிசு | — | ரூபா. 200/- |
| மூன்றாவது பரிசு | — | ரூபா. 100/- |

இவற்றுடன் முதற் பரிசு பெறும் மாணவன் பயிலும் பாடசாலைக்கும் தனியான பரிசு உண்டு.

போட்டி முடிவுகள் சஞ்சீவியில் வெளியிடப்படும்.

# மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

மக்கள் முகம்

## ஸ்ரீ வீரபத்திரர் சனசமூக நிலைய உறுப்பினர்கள்

நீர்வேலி, ஜுலை 14
நீர்வேலி தெற்கு குடியேற்றத்திட்ட மக்களின் நன்மை கருதி அப்பகுதியில் சனசமூக நிலையம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

நீர்வேலி சமுதாய முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. சி அப்புத்துரை 'ஸ்ரீ வீரபத்திரர் சனசமூகநிலையம்' என்ற பெயரில் இந்நிலையத்தை திறந்து வைத்தார்.

நிர்வாக சபை உறுப்பினர்கள் வருமாறு:— தலைவர்: திரு சி அப்புத்துரை. உபதலைவர்: இ. கனகலிங்கம், செயலாளர்: க. சிவபாதசுந்தரம், பொருளாளர்: க கணபதிப்பிள்ளை.

மேலும் பதினொருவர் கொண்ட நிர்வாக சபையும் அமைக்கப்பட்டது

வடக்கு கிழக்கில்

## தமிழ்மொழி அமுலாக்கத்தை தமிழர்தான் செய்ய வேண்டும்

### இராசதுரை கோருகிறார்

யாழ்ப்பாணம், ஜுலை 14
வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழி அமுலாக்கலை அங்கு வதியும் தமிழர்களும் தமிழ் அரசஊழியரும் இணைந்து செய்யவேண்டும். இது சம்பந்தமான பிரசார நடவடிக்கையில் அனைத்து இலங்கை இந்து வாலிபர் சங்கம் ஈடுபட வேண்டும்.

இப்படி பிரதேச அபிவிருத்தி, இந்துசமய விவகார அமைச்சர் திரு. செ இராசதுரை, தன்னை அண்மையில் சந்தித்த அனைத்து இலங்கை இந்து வாலிபர் சங்கத் தூதுக்குழுவிடம் வலியுறுத்தினார்

அமைச்சரை, சங்கக் குழு கடந்த வாரம் சந்தித்துப் பேசியது.

அமைச்சு அலுவலகத்தில் நடந்த இச்சந்திப்பின்போது, இந்துசமய விவகாரப் பணிப்பாளர் திரு. ஆ. பாஸ்கரதாஸ், பிரதிப் பணிப்பாளர் திரு என் இராசரத்தினம் தமிழ்மொழி, விவகாரப் பணிப்பாளர் திரு. எம். இராசநாயகம் ஆகியோரும் இருந்தனர்

சங்கத் தூதுக்குழுவில் திருவாளர்கள் க ஜெயகுமார், த மனோகரன், மா. செ கப்பையா, சே. இராசசேகரன், இ. ச. சர்மா, ச. சதானந்தன் ஆகியோர் அங்கம் வகித்தார்கள்.

தூதுக்குழு, அமைச்சரிடம் பின்வருவனவற்றை தெரிவித்தது.

● இந்துக் கோயில்கள், தேர்கள் அழிக்கப்பட்டு வருகின்றன-

● இந்துமதக் குருமார்கள் அவமதிக்கப்படுகின்றனர்

● அரச அலுவலகங்களில் தமிழ்மொழி அமுலாக்கலுக்கு இதுவரை ஒழுங்குகள் செய்யப்படவில்லை. போதியளவு தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள், தட்டெழுத்தாளர்கள், எழுதுவினைஞர்கள் நியமிக்கப்படவில்லை. இந்த நிலையில் தமிழ்மொழி அமுலாக்கல் நடைமுறைச் சாத்தியமற்றது

இக்குறைபாடுகளுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு சொன்னார்.

வடக்கு,கிழக்குத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் தமிழ் மொழி அமுலாக்கலுக்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் உறுதியளித்தார்.

## சேவை செய்பவர்களை மக்கள் மறக்க மாட்டார்கள்

### பிரியாவிடைக் கூட்டத்தில் உரை

உடுவில், ஜுலை. 14
மக்களுக்குச் சேவை செய்பவர்களை மக்கள் என்றும் போற்றுவார்கள். டாக்டர் சந்திரசேகர் போன்ற நேர்மையானவர்கள் எம் மத்தியில் இருப்பது தமிழ் சமுதாயத்துக்குக் கிடைத்த பெரும் பேறாகும்.

முன்னாள் கல்விப்பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சுன்னாகம் அரசினர் ஆஸ்பத்திரியில் நான்கு ஆண்டுகள் பணியாற்றிய பின் கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்திரிக்கு மாற்றலாகிச் செல்லும் டாக்டர் ம. சந்திரசேகரருக்கு சுன்னாகம்-பொது மக்களால் பிரியாவிடை [illegible] வைபவத்துக்கு தலைமை வகித்த சுன்னாகம் பிரஜைகள் குழு தலைவர் திரு. தி. மாணிக்கவாசகர் மேலும் பேசுகையில்.

கிளிநொச்சி மக்கள் தமது சொந்த மண்ணிலேயே நிர்க்கதிக்குள்ளாகியுள்ள இவ்வேளையில் அவர்களுக்கு டாக்டர் சந்திரசேகரர் போன்றவர்களின் சேவை மிகவும் அவசியம் என்றார்.

முன்னாள் பட்டண சபை உறுப்பினர்கள் திருவாளர்கள் மா. நடராஜா, ஆசீர்வாதம் ஹென்றி, ச. மருதலிங்கம், சுன்னாகம் ப. நோ. கூ. சங்க தலைவர் திரு. சி. குமாரவேல், ஐ மனோகரன் ஆகியோர் உட்பட பலர் டாக்டரின் சேவையைப் பாராட்டிப் பேசினர்.

(இ-ஒ-27)

## அரண்மனை வாசல் புனரமைக்கப்படும்

யாழ்ப்பாணம், ஜுலை 14
நல்லூர் சங்கிலி மன்னனின் அரண்மனை நுழைவாயில் பாதுகாப்புக்கும் 17,000 ரூபாவை செலவிடப்பட உள்ளது

யாழ் மாவட்ட கலாசார ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

நல்லூரில் தொல்பொருள்களைப் படம் எடுப்பதற்கும் 2,000 ரூபா ஒதுக்கப்பட்டது.

இப்படச்சுருள்கள் தொல் இயற் கலைக்கூடத்தில் பேணிப்பாதுகாக்கப் படவேண்டும் என்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது

கூட்டத்திற்கு யாழ் [illegible] வகித்தார். (உ-எ)


பிரயாண ஒழுங்குகள்

* கனடா
* ஜேர்மன்
* பிரான்ஸ்
* டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்
மற்றும்
பாஸ்போட், விசா,
பொண்ட், (BOND) ரிக்கட்
ஆகியனவும்
செய்துகொடுக்கப்படும்.

INTERSUN GROUP

சின்னத்தம்பி அவெனியூ,
(கவீர் கல்லூரிக்கருகாமையில்)
மானிப்பாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

கடவுளைச் சரண் அடைந்தவன் காப்பாற்றப் படுவான்.

—அன்னை சாரதாதேவி

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல. 13 2வது ஒழுங்கை தொலைபேசி 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம். 14-07-86 த பெ. 23

## சட்டவிரோத மின்பாவனை: அது ஆகாது; வேண்டாம்

யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபைக்கு மின்சார விநியோகத்தால் பெருநட்டம் ஏற்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. பதிவு செய்யப்பட்ட — சட்டரீதியான மின்பாவனையாளர்களிடம் இருந்து சபை வசூலிக்கும் பணத்தைவிட இரண்டு மடங்கு கூடுதல் தொகை மின்சார சபைக்குச் செலுத்தப்படுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

இந்த அவல நிலைக்குச் சட்டவிரோத மின்பாவனையே முழுமுதற் காரணம் என்று கண்டறியப்பட்டிருக்கிறது. அது சொல்லாமலே விளங்கும். குடாநாட்டின் சகல பகுதிகளிலும் நினைத்துப் பார்க்கவும் முடியாத அளவுக்குச் சட்டவிரோத மின்பாவனை அதிகரித்திருக்கிறது.

வீதிக்கு வீதி, ஒழுங்கைக்கு ஒழுங்கை, முடக்கிற்கு முடக்கு, மின்சார வயர்கள் கண்ட கண்ட மாதிரிக் கொழுவப்பட்டிருப்பதைக் காண முடிகிறது.

உரிய முறைப்படி மின்சார விநியோகம் நடக்காமையால் பல உயிர்ப்பலிகளும் நிகழ்ந்துள்ளன. பலர் மோதுண்டும் உள்ளனர். அதிகாரிகள் எந்தவித நடவடிக்கையும் எடுக்க முடியாத கையறு நிலைக்குத் தள்ளப்பட்டும் உள்ளனர்

மொத்தத்தில் சட்டவிரோத மின் பாவனை பெரும் சமூகப் பிரச்சனையாக உருவெடுத்திருக்கிறது. அதனை நியாயப்படுத்தும் விதத்தில் வாதாடுவோரும் உள்ளனர்

* மண்ணெண்ணெய் மற்றும் எரிபொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதால் வீடுகளில் விளக்கு எரிக்கவும், விவசாயம் மற்றும் சிறு கைத்தொழில்களுக்கும் மின்சாரம் தேவைப்படுகிறது. அதனால் சட்டவிரோத மின்பாவனை தவிர்க்க முடியாதது ஆகிறது.

* ஒரு பகுதியில் திருட்டுத்தனமாக மின்சார விநியோகம் பெறப்பட்டால் அடுத்த பகுதியினரைத் தடுப்பது இயலாது; தடுக்கக் கூடாது.

* மின்சாரம் அரசாங்கச் செலவுதானே. ஆகையால் இந்தக் கஷ்ட காலத்தில் எல்லோரும் மின்சாரத்தைப் பாவிக்கட்டுமே, அதில் என்ன நட்டம்?

* பணவசதி படைத்தவர்கள் மட்டும் மின்சாரம் பாவிக்க, வசதியற்றவர்கள் மின்சாரத்துக்காக ஏங்கித் தவித்து இருளில் வாழ்வதா?

சட்டவிரோத மின்பாவனையை நியாயப்படுத்துவோர் மேற்கண்ட காரணங்களைக்கூட முன் வைக்கிறார்கள்!

அரசாங்கம் அபிவிருத்திச் சபைக்கு இலவசமாக மின்சாரம் வழங்கவில்லை. பணத்துக்குத்தான் கொடுக்கிறது. விநியோகமாகும் அத்தனை அலகு மின்சாரத்துக்கும் பணம் செலுத்தினால் தான் தொடர்ந்து மின்சாரம் குடாநாட்டிற்குக் கிடைக்கும். பணம் செலுத்தப்படாவிட்டால் அது முற்றாகத் துண்டிக்கப்படும் அபாயம் உண்டு.

மின்சாரம் தொடர்ந்து கிடைக்க வேண்டும் என்பதற்காக அபிவிருத்திச் சபை சட்டவிரோத மின்சாரத்துக்கும் பணத்தைச் செலுத்துவதற்கு வேறு அலுவல்களுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தைத் தான் பயன்படுத்த வேண்டும். அதனால் ஏனைய முக்கிய அலுவல்கள் தடைப்பட நேரிடும்

மின்சாரம் தொழில்நுட்ப ரீதியாக விநியோகிக்கப்படவேண்டிய ஒன்று. விநியோகக் கொள்ளளவுக்கு அதிகமாகப் பாவனை இருக்கும் பட்சத்தில், விநியோகம் அற்றுப்போகும் அளவுக்கு மின்மாற்றிகள் மற்றும் இயந்திர சாதனங்கள் சேதமடையும் அபாயம் உண்டு. அதனால் குறிப்பிட்ட பகுதிக்கு நிரந்தரமாகவே மின்விநியோகம் இல்லாமலும் போகலாம்.

மின்சாரம், திட்டமிட்டு, அளவு கணக்குடன் விநியோகிக்கப்படவேண்டிய ஒன்று. ஒரு ஒழுங்கு முறையின்றி விநியோகம் நடக்கும் பட்சத்தில் சட்டபூர்வ பாவனையாளர்களுக்கும் பலவித பாதிப்புக்களை உண்டாக்கும்.

சகலருக்கும் குறைந்த கட்டணத்தில் மின் வசதி கிடைக்கவேண்டுமானால், அதிகளவு மின்சாரத்தைத் தெற்கில் உள்ள உற்பத்தி நிலையங்கள் தர முன்வரவேண்டும். இப்போதுள்ள அரசியல் சூழ்நிலையில் அது சாத்தியமானது அல்ல

கிடைப்பதைக் கொண்டு சமாளிக்கவேண்டிய நிலை. ஆனால் மின்சாரம் அரிசியைப்போலவோ சீனியைப்போலவோ கிள்ளிக்கொடுக்கக் கூடிய சரக்கல்ல.

தென்னிலங்கையின் தயவில் தங்கியிராமல், எமது பகுதியிலேயே வேண்டிய அளவு மின்சார உற்பத்தி நடந்தால் மட்டுமே எல்லோருக்கும் தாராளமாக குறைந்த கட்டணத்தில் மின்வசதி செய்யமுடியும். அந்த நிலையை அடைவதற்கு எரிவாயு போன்ற மாற்றுச்சக்திகளை நாம் உற்பத்தி செய்யவேண்டும்.

அப்படிக் கிடைத்தாலும் கூட சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவது திருட்டுத்தனம். அது சமூக விரோதமானது. நீதிக்கு ஒவ்வாதது.

எனவே எந்தவகையிலும் சட்டவிரோத மின்பாவனை மலிந்துபோக இடம் கொடுக்க இயலாது. ஆளுக்கொரு நீதி ஆகாது. நீதி எல்லோருக்கும் பொதுவானதாக இருக்க வேண்டும். இதனை எல்லா மக்களும் உணர்வது நல்லது.

## புங்குடுதீவில் கண்காட்சி

புங்குடுதீவு, ஜூலை 14

புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகாவித்தியாலயத்தில் கல்விக் கண்காட்சியொன்று நாளையும் நாளை மறுதினமும் நடைபெறவிருக்கிறது.

புங்குடுதீவுகோட்டக் கல்விப் பாடசாலை அதிபர் திரு. ஆர். எஸ். செல்வத்துரை இக்கண்காட்சியை நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்குத் திறந்து வைப்பார்.

வித்தியாலய அதிபர் திரு. த. துரைசிங்கம் தலைமையிலான ஆசிரியர் குழு இக்கண்காட்சிக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது. (உ-131)

# இந்து முஸ்லிம் கலவரம்

# குஜராத்தில் 40 பேர் பலி

## 4 நாட்களாக மோதல்

அகமதாபாத், ஜூலை 13

குஜராத்தில் நான்கு நாட்களாக நிகழ்ந்து வரும் இந்து முஸ்லிம் கலவரங்களில் 40 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

தலைநகர் அகமதாபாத்தில் மூண்ட கலவரம் மாநிலம் முழுவதும் பரவியிருப்பதாகத் தெரியப்படுகிறது

தீவைப்பு, கொள்ளை, சூறையாடல், கல்லெறி, துவக்குச் சூடு, கத்திக்குத்து தாக்குதல் சம்பவங்கள் மாநிலம் முழுவதும் நிகழ்ந்து வருவதாக அங்கிருந்து வந்த செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜகநாத் சுவாமியின் தேர் ஊர்வலத்தின் போது ஏற்பட்ட சிறு மோதலே பெரும் கலவரமாக வெடித்தது.

குஜராத்தின் பல பகுதிகளிலும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

பொலிஸாரும், ரிசேர்வ் பொலிஸாரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள்.

அவசர நடவடிக்கைகளுக்காக இராணுவப் படையை அழைப்பது குறித்து ஆலோசிக்கப் பட்டுவருகிறது (உ-ஒ)

## பஞ்சாப்பில் எச்சரிக்கை

சண்டிகார்: ஜூலை 13

நாட்டைச் சீர்குலைக்கும் சதிக்கும்பல்களுக்கு எதிராக நேற்று பஞ்சாப்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

பஞ்சாப்பில் நேற்று நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில் இந்த எச்சரிக்கை தெரிவிக்கப்பட்டது

தாமதமின்றி பஞ்சாப் உடன்பாட்டை நிறைவேற்றுமாறும்-

பயங்கரவாதத்தை தடுக்க தீவிர நடவடிக்கை மேற்கொள்ளுமாறும்-

பாகிஸ்தானுடனான எல்லையை மூடிவிடுமாறும் மாநாடு கோரிக்கை விடுத்துள்ளது. (உ-ஒ)

## வெளி உலகில்

## மது ஒழிப்பினால் பலர் உயிர் தப்பினர்

### ரஷ்ய அறிக்கை தகவல்

மாஸ்கோ, ஜூலை. 13

ரஷ்யாவில் மேற்கொள்ளப்பட்ட தீவிர மது எதிர்ப்புப் பிரசாரங்களால் இருதய வியாதிகளில் இருந்து பலர் தப்பியுள்ளதாக அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது

சுமார் ஒரு லட்சம் மக்கள் மதுவை ஒழித்துள்ளனர். அவர்களுக்கு முன்னர் இருதய வியாதி ஆரம்பிப்பதற்கான அறிகுறிகள் இருந்தபொழுதும், மதுவை விட்டதினால் அவர்கள் பூரண சுகம் பெற்றுள்ளனர்.

அத்துடன் ஏற்பட்ட சாலை விபத்துக்களும், வேலை செய்யும் இடங்களில் ஏற்பட்ட விபத்துக்களும் பல வன் செயல்களும் கணிசமான அளவு மது ஒழிப்பு பிரசாரத்தால் குறைந்துள்ளது.

ரஷ்ய அரசு வெளியிட்ட ஆய்வு அறிக்கை ஒன்றில் இந்தத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன (உ-ஒ)

## மிஸோ அரசியல் சாசனம் மாற்றம்

ஐசா, ஜூலை. 13

மிஸோராம் பகுதியை சுதந்திர பூமியாகப் பிரகடனப் படுத்தியிருந்த மிஸோ தேசியமுன்னணி அதை மாற்றும் வகையில் தனது அரசியல் சாசனத்தை மாற்றியுள்ளது.

இந்தியாவின் தேசிய சட்ட திட்டங்களுக்கு அமைவாக அதன் அரசியல் கொள்கைகள் திருத்தம் செய்யப்பட்டுள்ளன.

## ராஜீவின் கவலே!

சென்னை - ஜூலை 13

இலங்கைத் தமிழர்கள் கொல்லப்படுகிறார்கள் எனச் செய்தி வரும் பொழுதெல்லாம் பிரதமர் ராஜீவ் காந்தி எவ்வளவு வேதனைப் படுவார் என்பதும்-

பலநாட்கள் தூக்கம் இல்லாமல் அவதிப்படுவார் என்பதும்-

அவருடன் பணியாற்றும் சகா என்பதால் தான் நன்று அறிந்திருப்பதாக மத்திய நிதி அமைச்சர் திரு. விஸ்வநாத் பிரதாப் சிங் நேற்று சென்னையில் தெரிவித்தார்.

பஞ்சாப், அஸாம், மிஸோராம் பகுதிகளின் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்த அவர் இலங்கைத் தமிழர் பிரச்சினைத் தீர்வுக்கும் அதிக ஆர்வம் காட்டி வருகின்றார்.

- இவ்வாறு திரு. சிங் மேலும் கூறுனார். (ஒ)

## புயலுக்கு 14 பேர் பலி

இஸ்லாமாபாத் ஜூலை 13

பாகிஸ்தானின் வடக்குப் பகுதியில் வீசிய புயற்காற்றால் 14 பேர் பலியாகினர் பலர் பலத்த காயங்களுக்கானார்கள்.

பாகிஸ்தானின் பல பகுதிகள் புயற்காற்றால் தாக்கமடைந்துள்ளது. (உ-ஒ)

## புதிய மந்திரிசபை

அல்குவையாத் ஜூலை 13

குவைத்தில் பட்டத்து இளவரசர் ஷேக் அல் அப்துல்லா ஸலீம் ஸாபிட் தலைமையில் 21 உறுப்பினர் கொண்ட புதிய மந்திரிசபை அமைக்கப் பட்டுள்ளது.

மந்திரி சபையில் இரண்டு பேர் புதிய முகங்கள். (உ-ஒ)

## கெனியாவும் பகிஷ்கரிப்பு

நைரோபி ஜூலை 13

தென் ஆபிரிக்கா குறித்த பிரிட்டிஷ் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கெனியா நாடும் காமன் வெல்த் விளையாட்டுப் போட்டிகளை பகிஷ்கரிக்கப் போவதாக அறிவித்துள்ளது.

நைஜீரியா, கானா, உகண்டா ஆகிய நாடுகள் இதே காரணத்துக்காக ஏற்கனவே மது பகிஷ்கரிப்பை வெளியிட்டிருந்தன. (உ-ஒ)

## குஜராத்தில் பதற்றம்

அஹமதாபாத். ஜூலை13

குஜராத் மாநிலத்தில் நிலவும் பதற்றமான நிலையினால் அங்கு இந்திய இராணுவம் தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கிறது.

நேற்று நடந்த ஹர்தாலில் 16 பேர் பலியானார்கள்

அஹமதாபாத்தில் நிலைமை இன்றும் பதற்றமாக இருந்துவருகின்றது. நிலைமை மேலும் மோசமடைந்தால் மத்திய அரசின் அனுமதியுடன் இந்திய ராணுவம் அழைக்கப்படலாம்என்று குஜராத் முதல்வர் திரு. சமர்சிங் செளத்திரி தெரிவித்தார். (உ-ஒ)

## வித்தாரம்

என்ன முரளியார் முகம் பூரிக்க வாறீர் ஏதாவது நல்ல காரியம் நடந்திட்டுதோ... கலியாணம் கிலியாணம் பேசுகினமோ— பொம்பிளை உமக்கு முன்னுக்கே தெரிஞ்ச பெடிச்சியோ...?!

அட, நீ எப்பவும் ஒரு வித்தியாசமான பேர்வழிதான். அரசியல் களை கட்டி இருக்குது எண்டதுக்காக உந்தளவு சந்தோஷப்படுகிறியோ ...?

சரி, சரி உனக்கு அரசியல் வாதியா வாற ஆசை சாடைமாடையாய் இருக்குது போலை.

நீ சந்தோசப்பட்டதிலும் சின்ன ஞாயம் இருக்கத்தான் செய்யுது.

இவ்வளவு நாளாய் ஆமி எண்டும் சூடு எண்டும், ஹெலி எண்டும், பொம்பர் எண்டும் இருந்த பேச்சு இப்ப அரசியல் பக்கம் சாய்ந்திருப்பதைக் காணமுடியுது.

தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடையாதா எண்ட ஆவலில சனம் பேச்சுவார்த்தை என்ன மாதிரி முடியும் எண்டு அறிய விரும்புதுகள். கோயில் - குளங்களில, வாசிகசாலைகளில- விளையாட்டு மைதானங்களில, தேத்தண்ணிக் கடையள்- சந்தை சாவடியளில எல்லாம் இப்ப இது தான் கதை.

அதிஉத்தமர் முன் வைத்த மாகாண சபையில ஒண்டுமில்லை, அதுபுதிய மொந்தையில பழைய கள்ளுத்தான் எண்டதும் சனத்துக்கு நல்லா விளங்குது.

தென்னிலங்கையாரை நம்பி நம்பி மோசம் போன அனுபவம் சனத்திட்டை நல்லா மனதில வேர்விட்டுக் கிடக்குது உவர் உத்தமர் எல்லாரையும் பேய்க் காட்ட வல்லவர் எண்டதையும் சனம் மறக்கவில்லை.

நேற்றைக்கு ஆளி உத்தரம் கோயில் விசேஷம் காலையில ஒருக்கா அந்தப் பக்கம் தலைவைக் காட்டினேன். அப்ப சனத்திண்டை எண்ணத்தை இடக்கையில நல்லா அறிய முடிஞ்சுது.

உவ்வளவு அழிவு கேட்டுக்குப் பிறகும் ஒண்டா வாழுற நிலை சரிவராது, நாங்கள் எங்கடை பாட்டில தனிய வாழ ஒரு வழி இருக்க வேணும். இல்லாட்டால் அழிஞ்சாலும் பறவாயில்லை எண்ட கருத்துத் தான் மேலோங்கி நிண்டதைக் காண முடிஞ்சுது.

சாதகமானதை வாங்கிக் கொண்டு பிறகு அதில இருந்து கொஞ்சம் முன்னேற்றம் காண முடியாதே எண்டு அங்கலாய்க்கிற ஒண்டு இரண்டும் இல்லாமல் இல்லை.

ஒரு விஷயமெண்டா பல அபிப்பிராயம் வாறது இயற்கைதானே. அதுவும் எங்கடை யாழ்ப்பாணத்தார் அபிப்பிராயம் சொல்லுறதெண்டா தாராள மனம் படைச்சவை. செயல் தான் 'சைபர்'! எல்லாத்திலையும் சலிப்படைஞ்ச பேசிறதிலையும் இவை வலு விண்ணர்!!

* * *

கொழும்பில இப்ப அரசியல் பரபரப்பு சூடு பிடிக்கத் தொடங்கி விட்டுதாம். அதுவும் எங்கடை கூட்டணிக்காரர் இந்தியாவிலிருந்து வந்த பிறகு அரசியல் உலகம் ஒரே 'பிஸி'யாம்.

சந்திப்புகள், பேச்சுகள், ஆலோசனைகள் எண்டு ஒரே அமர்க்களப் படுகுதாம் கொழும்பு.

அரசியலார் மட்டுமில்லை சமூக விரோதச் சக்திகளும் அங்கை பிஸியாய் இருப்பதாகப் பேச்சு! ஆர்ப்பாட்டங்கள், மோதல்கள் எண்டு கடைசியில குழப்பங்கள் நெருக்கடியாய் மாறினாலும் மாறும் எண்டு கதையள் அடிபடுகுது...? ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்...!

தேனீ

## சைவசமயம் பரப்பும் மதம் அல்ல; பரவும் மதம்

மன்னார் ஜூலை 14

துவக்கமும் முடிவும் அற்றது ஆதிமூலம். அதனால் ஆதிமூல விநாயகருக்கு நாம் ஆராதனை செய்கிறோம். எனவே தான் சைவமதம் பரப்பும் மதமல்ல பரவும் மதம். விஞ்ஞானம் வளர வளர மெஞ்ஞானமாகிய எமது மதத்தின் தத்துவ — சித்தாந்தங்களும் தெளிவாகிவிடுகின்றன.

இவ்வாறு சைவமகா சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் கலைஞர் எம். உதய குமார் கூறினார்.

மன்னார் மாவட்டத்தினரின் பூம்புகார் கிராமத்தில் புனரமைப்புச் செய்யப்பட்ட சித்தி விநாயகர் ஆலயத்தின் சமீபத்தில் நடைபெற்ற பொங்கல் பூசையில் இவர் உரை நிகழ்த்தினார்.

பெரிய விநாயகரின் உருவப்படத்தை பூம்புகார் சித்திவிநாயகர் ஆலயத்துக்கு இவர் அன்பளிப்புச் செய்தார். வைபவத்தில் ஏராளமான மக்கள் இனமத பேதமற்ற முறையில் கலந்து கொண்டனர். (இ-1)



**குறள்:**

அறிவினுள் எல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல்.

**பொருள்:**

தம்மை வருத்துவோருக்கும் தீய செயல்களைச் செய்யாமல் இருத்தலே, அறிவு எல்லாவற்றிலும் தலையான அறிவு என்று கூறுவர்.

# இராணுவ நடவடிக்கைகளுக்கு புலிகளிடமிருந்து பலமான எதிர்ப்பு

## கனவுலகில் லலித்

### 'புரொன்ட்லைன்' விமர்சனம்

சாதகமான காரணிகள் சரியான முறையில் பயன்படுத்தப்படாமல் பேச்சுக்கள் தோல்வி அடையுமானால், அதற்கு தீர்மானம் எடுக்கும் நிலையில் உள்ள ஜெயவர்த்தன - அத்துலத்முதலி கோஷ்டி மீது தான் குற்றஞ்சாட்ட வேண்டி வரும்

இப்படி 'புரொன்லைன்' சஞ்சிகையின் ஜூன் 28 - ஜூலை 11 இதழில் வெளியான கட்டுரை ஒன்றில் கூறப் பட்டுள்ளது.

அதன் இறுதிப் பகுதி இன்று பிரசுரமாகின்றது.

திருமதிசிறிமாவோபண்டாரநாயக்காவின் மருமகனான விஜய குமாரணதுங்க சிங்கள அரசியல் வாதிகளிலும் பார்க்க ஒரு படி மேலே சென்று அர்த்தமுள்ள அதிகாரப் பரவாக்கலின் கீழ் பேச்சுக்கள் மூலம் நியாயமான தீர்வு ஒன்றை தமிழர் பிரச்சினைக்குக் காண வேண்டும் என்று வாதாடி வருகின்றார்.

சென்னை விஜயத்தின் போது தமிழர் தரப்புடன் போராளிகளையும் சேர்த்துப் பேச்சுக்கள் மூலம் தீர்வுகாணும் அவசியத்தையும் அதில் இருந்து தப்பமுடியாத நிலையையும் அவர் வற்புறுத்தினார்.

பரந்த அடிப்படையில் அமைக்கப்படும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு -

ஆறாவது அரச அமைப்புச் சட்டத்திருத்தத்தை நீக்குவது-

இந்தியாவின் ஆதரவை நல்ல முறையில் பயன்படுத்துவது-

ஆகிய அவரின் கோரிக்கைகள் முற்போக்கான தீவிர இராணுவ வெறியற்ற சிந்தனைக்கு கிடைக்கு

வெற்றியாகும்.

அடிப்படையில், இந்த அரைச் சந்தர்ப்பத்தையும் வரையறுக்கப்பட்ட சாதகமான காரணிகளையும் சரியான முறையில் பயன்படுத்தவதில் தவறுதல் இடம் பெறுமானால், அதற்கு யு. என். பி. அரசில் தீர்மானம் எடுக்கும் நிலையில் உள்ள ஜெயவர்த்தன - அத்துலத்முதலி கோஷ்டிமீதுதான் குற்றஞ்சாட்ட வேண்டி வரும்.

இராணுவ, அரசியல் தீர்வுகளை ஒன்றாகக் குழப்பியடித்ததினால், நீண்டகாலமாக இடம் பெற்ற பேச்சுக்களில் தமிழர் கலந்து கொள்ள முடியவில்லை.

அப்பாவிக் குடிமக்கள் மீது அடக்குமுறை சுமத்தப்பட்டது ஜெயவர்த்தன கம்பெனியினால் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தை மீதான நம்பிக்கை குறைந்தது

இராணுவ - அரசியல் தீர்வை ஒன்றாகப்போட்டு குழப்பியதினால் மேற்கண்டவற்றைத்தான் அடைய முடிந்தது.

1986 ஜூன் - ஜூலை மாதங்களில் திரு. ஜெயவர்த்தன ஒரே நேரத்தில் 3 அல்லது 4 வழிகளில் ஓடி விளையாடப் பார்க்கிறார் என்று சுயேச்சை அவதானிகள் கூறுகின்றனர்.

முதலாவது வழி இந்தியாவின் நல்லாதரவைப் பயன்படுத்தி இலங்கை ... அமைப்புக்குள் ...

இடையே பேச்சுக்களை நடத்தித் தீர்வு காணுவது.

இப்பாதையைக் கொழும்பு அரசு பாவிக்கும் முறை நல்லவிதமாக அமையவில்லை.

இரண்டாவது பாதை, வெளிநாட்டுத் தீவிரவாத சக்திகளின் துணையுடன் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணுவது.

இது அமைச்சர் அத்துலத்முதலியின் நிபுணத்துவத்தில் தோன்றிய கற்பனை.

தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தில் ஒருபோதும் வெல்ல முடியாது என்று இராணுவ நிபுணர்கள் கொடுத்த ஆலோசனைக்கு முரணாக இந்தக் கனவுலகில் அத்துலத்முதலி சஞ்சரிக்கின்றார்.

இராணுவ நடவடிக்கைகள் போராளிகளிடமிருந்து, குறிப்பாக, வட பகுதியில் முன்னணியில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்து பலமான எதிர்த் தாக்குதலை எதிர்நோக்க வேண்டியதாயிற்று.

அதுபோன்று வெடிகுண்டுத் தாக்குதலில் நிபுணத்துவம் பெற்ற ஈரோஸ் இயக்கத்தினரின் தாக்குதலையும் எதிர்நோக்க வேண்டிய நிலை அரசுப் படையினருக்கு ஏற்பட்டது.

தெற்கிலும் கிழக்கிலும் ஈரோஸின் நடவடிக்கைகள் ... ஏற்படுத்தின.

மூன்றாவது வழி, அரசியல் கட்சிகள் மாநாடு. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மாகாண சபைகளை நிறுவும் யோசனைகள் பற்றி ஆராய இம்மாநாடு கூட்டப்பட்டுள்ளது.

இதனைப் பகிஷ்கரிக்கும் சுதந்திரக்கட்சியின் நடவடிக்கையினால் மாநாட்டின் பெறுமதி குறைந்து விட்டது.

இது போதாது என்று யார் ஏற்றாலும்சரி ஏற்காவிட்டாலும் சரி தனது யோசனைகளை ஒருதலைப் பட்சமாக நடைமுறைப் படுத்துவேன் என்று இலங்கை அரசு உறுதி அளித்துள்ளது அல்லது பயமுறுத்தியுள்ளது.

சின்னஞ்சிறிய தீவின் விவகாரங்களில் என்ன ஆழமான, பயங்கரமான தவறு ஏற்பட்டு விட்டது என்பதைத் தான் இந்த நான்கு வழி அணுகுமுறை காட்டுகின்றது. (உ-எ)

## கலாசாரக் குழு முடிவு

யாழ்ப்பாணம். ஜூலை 14

ஆறுமுகநாவலரின் முதலாம் சைவவினாவிடை நூலைப் பதிப்பிப்பது என்று யாழ் மாவட்ட கலாசார ஆலோசனைக் குழு முடிவு செய்துள்ளது. 16 பக்கங்கள் கொண்ட ஐயாயிரம் பிரதிகளை மாத்திரம் பிரசுரிப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சமய கலாசாரக் குழு இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆலோசனைக் குழு கேட்டுக்கொண்டது இதற்கான செலவாக 20,000 ரூபா மதிப்பிடப் பட்டுள்ளது (உ-ர)

## புங்குடுதீவில் தண்ணீர் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 14

புங்குடுதீவுப் பகுதியில் தண்ணீர் தட்டுப்பாடு நிலவுகிறது.

கோடை காலத்தில் வழமையைவிட இம் நிலவுமுறை அதிக வறட்சி கிறது.

வழமையாக கோடை காலத்தில் ஓரளவு உப்புத்தண்ணீராவது கிடைக்கக் கூடியதாக இருந்தது. இம்முறை அதுவும் இல்லை.

கடந்த காலங்களில் அரசாங்கத்தால் சாட்டியிலிருந்து குடிநீர் விநியோகிக்கப்பட்டது. இம்முறை அதுவும் நிறுத்தப் பட்டுள்ளது.

தீவுப்பகுதிப் பிரமுகர்கள் அரச அதிபரைச் சந்தித்து தம் குறைகளை கூறியபோது இந்த விடயம் குறித்தும் புகார் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**NIRU Tuition Centre**
Station Road, Kondavil
O/L DAY Classes பிரிவு 4
யூலை 14 காலை 8 முதல் 1.30 வரை
குறிப்பு: குறிப்பிட்டளவு மாணவர்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்.
முற்றிலும் பாடசாலை வசதி கொண்டவை.
4 மாதத்திற்குள் முழுப் பாடத்திட்டமும் பூர்த்தி யாக்கப்படும்.

# உதயன்

14 07 1986 திங்கட்கிழமை

**NIRU Tuition Centre**
Station Road, Kondavil.
A/L 87, 88 யூலை 15இல் ஆரம்பம்
87 - பௌதிகம்
சனி: 10.30, ஞாயிறு: 10-30 செவ்வாய்: 4-5
பௌதிகவியலும் தூய கணிதமும்
88 ஒளியியல்
செவ்வாய்: 5-6, வியாழன்: 5-6
Mr சௌந்தர் B.Sc (Hons)
87 - இரசாயனம் - சேதன இரசாயனம்; சனி - 9, ஞா - 9
அசேதன இரசாயனம்: செ 3-4, வெள் - 3-4
88-பௌதிகஇரசாயனம்: Mr. செல்வா B.Sc. (Hons)
சனி: 8 9. ஞாயிறு: 8-9

# தமிழீழம் தவிர்ந்த எதையும் நிச்சயம் ஏற்கமாட்டோம்

## போராளிகள் கூட்டாக அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 14

மாகாணசபை யோசனையால் தமிழ் மக்களுக்கு எந்தவிதமான பிரயோசனமும் ஏற்படப்போவதில்லை.

மாகாணசபையை மட்டுமல்ல தமிழீழம் தவிர்ந்த எந்தசபையை கூட்டணி ஏற்றுக் கொண்டாலும்அதனை நாம் நிச்சயமாக ஏற்றுக் கொள்ள மாட்டோம்.

நேற்று நடைபெற்ற மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியின் பின்னர் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டன.

ஐந்து போராளிகள் அமைப்புகள் ஒன்று சேர்ந்து இந்த மாநாட்டை ஒழுங்கு செய்திருந்தன.

மாகாணசபை பற்றிய பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த அமைப்புகள் மேலும் சொன்னதாவது;

தமிழீழம் தவிர்ந்த எந்த ஒரு தீர்வையும் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதை இந்த ஆர்ப்பாட்டப் பேரணி எடுத்துக் காட்டியுள்ளது.

இழக்கிலும், மலையகத்திலும் தமிழர்கள் வாழ்ந்ததற்கான தடயமே இல்லாமல் அழிப்பதற்கு அரசு முயன்றுவரும் வேளையில்கூட்டணியினர் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது பயனற்றது.

சர்வதேச ரீதியில் உதவிதேடவே-ஜே.ஆர். தன்னை ஒரு சமாதானப் பிரியர் எனக் காட்டிக் கொள்ளவே இந்த மாநாட்டைக் கூட்டினார்.

இந்த மண்ணை மறந்தவர்கள் இந்த மண்ணில் மக்களுடன் வாழாதவர்கள் எப்படி எம்மக்களை பிரதிநிதித்துவப்படுத்தி பேசலாம்?

விஜயகுமாரணதுங்க செல்வை சென்று பேசியது போலவே அமிர் இலங்கை வந்து பேசுகிறார்.

நாம் இந்தியாவைக் கேட்பது எம்போராட்டத்தை அங்கீகரித்து சர்வதேச ரீதியில் எம் பிரச்சினையை எழுப்ப வேண்டும் என்பதே.

—இப்படி அங்கு கருத்துகள் தெரிவிக்கப்பட்டன. (உ-5-10)

## நேற்றைய பேரணியில் பல சுலோகங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 14

நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் பல சுலோகங்கள் எழுதப்பட்ட அட்டைகள் எடுத்துச் செல்லப்பட்டன.

* கொழும்பில் பேச்சுவார்த்தை இங்கு படுகொலை.
* மாகாண சுயாட்சி ஜே. ஆரின். சன்ஜடைப்பு.
* கூட்டணியே உன் பதவி ஆசை தீரவில்லையா?
* மக்கள் இராணுவ முகாமில் கூட்டணி பஞ்சு மெத்தையில்.
* சிறிலங்காவின் ஆனேசரி நீலன் திருச்செல்வமா?
* பேச்சுவார்த்தை வேண்டாம் தனிநாடு வேண்டும்.
* கூட்டணித் துரோகிகளை தூக்கி எறிய வேண்டும்.
* ஆவரங்கால் மாநாட்டை கூட்டணி மறந்ததேன்?
* 'வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை விட்டுக் கொடுத்ததேன்?'
* கூட்டணித் தலைமையை நிராகரிப்போம்'
* 'இந்திய மக்களே எமது போராட்டத்திற்கு ஆதரவு தாரீர்!
* 'பேச்சுவார்த்தை வேண்டாம்'

—இது போன்ற சுலோகங்கள் எழுதப்பட்ட அட்டைகளே எடுத்துச் செல்லப்பட்டன. (உ-10-27)

## அரசு - கூட்டணி . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு இரா. சம்பந்தன், திரு. வெ. யோகேஸ்வரன், திரு வி. ஆனந்தசங்கரி ஆகியோருடன் டாக்டர் நீலன் திருச்செல்வம், திரு. பி. எஸ் சூசைதாசன் ஆகியோர் இடம் பெற்றனர்.

பேச்சுக்கள் குறித்துப் பத்திரிகைகளுக்கு எந்தத் தகவல்களும் வெளியிடுவது இல்லை என இரு தரப்பினரும் தமக்குள் ஓர் உடன்பாட்டிற்கு வந்தனர்.

இன்று திங்கள் மாலை 5 மணிக்கு இலங்கை அரசு— கூட்டணியின் இரண்டாவது கட்டப் பேச்சுக்கள் இடம் பெறும். (உ-எ)

## எமது நிலைப்பாட்டை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னைத் தெரிவித்தோம்.

கேள்வி: பேச்சுக்கள் ஒருதரப்புப் பேச்சாகவா அதாவது நீங்கள் மட்டும் விளக்கம் கொடுக்கும் பேச்சாகவா அமைந்து இருந்தது?

அமிர்; இரு தரப்பினரும் கருத்துப் பரிமாறிக் கொண்டோம்.

கேள்வி: பேச்சின் தன்மை, முன்னேற்றம் பற்றிக் கூறமுடியுமா?

அமிர்: பேச்சுக்களை எதிர்த்து யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெறுகின்றது இதன் அடிப்படையில் நாம் மிகவும் கவனமாகத் தான் கருத்துக்களை வெளியிட வேண்டும்

பேச்சுக்கள் பற்றி என்னால் இப்போதைக்கு ஒன்றுமே சொல்லமுடியாது மன்னித்துக் கொள்ளுங்கள்.

கேள்வி: ஜனாதிபதி, தனது புதிய யோசனைகள் குறித்து அரசியல் கட்சிகளுடன் தனிப்பட்ட முறையில் பேச்சுக்கள் நடத்தினர். பேச்சுக்களில் கலந்துகொண்ட கட்சித் தலைவர்கள் பின்னர் தங்கள் யோசனைகள் குறித்து ஜனாதிபதி எப்படி நடந்து கொண்டார் என்பது பற்றி செய்தியாளர்களிடம் தெரிவித்தனர். அப்படி நீங்கள் சொல்ல முடியாதா? உங்கள் விளக்கங்களுக்கு ஜனாதிபதி தரப்பில் எப்படி வரவேற்பு இருந்தது?

அமிர்: மற்ற அரசியல் கட்சிகள் ஜனாதிபதியைச் சந்தித்துவிட்டு வந்து வெளியே அதுபற்றி செய்தியாளர்களுக்குச் சொல்வது வேறு விஷயம்.

நாம் அப்படி அல்ல. தமிழர் விடுதலைக் கூட்டணி இப்பிரச்சினையுடன் நேரடியாகச் சம்பந்தப் பட்டுள்ளது. நாம் மற்றக் கட்சிகள் போல் கருத்துக் கூற முடியாது.

பேச்சுக்கள் பற்றி உணர்ச்சி பூர்வமற்ற முறையில் அரசியல் கருத்துக்களை இப்போது நாம் சொல்ல முடியாது. (அ-எ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சாரநிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை 15-ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட், ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது வெளியீட்ட திகதி 14—07—1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power House Road. JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office, SriLanka Under Numbar QJ 60 N86.

## ஆறு மைல்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

அடைந்தது.

சுமார் ஆறுமைல் நீளமான இந்த ஊர்வலத்தில் கொதிக்கும்வெயிலையும் பொருட்படுத்தாது ஆண்கள், பெண்கள், முதியவர்கள் உட்பட சுமார் பத்தாயிரம் பேர் கலந்து கொண்டனர்.

ஊர்வலத்தில் சென்றவர்கள் சுலோக அட்டைகளைத் தாங்கிய வண்ணம், சுலோகங்களைக் கோஷித்தவாறு சென்றனர்.

அரசின் சில்லறைச் சலுகைகளையும் அரைகுறைத் தீர்வுகளை எதிர்ப்பதற்காகவும்—

சர்வ தேசமும் இந்தியாவும் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டும் எனக் கோரியும் — இந்தப் பேரணி நடத்தப்பட்டது.

### அமிர் கொடும்பாவி

அமிர்தலிங்கத்தின் கொடும்பாவியும் நேற்று யாழ் பல்கலைக்கழக வளவில் தீமூட்டி எரிக்கப் பட்டது.

யாழ். பல்கலைக்கழகத்தை பேரணி வந்தடைந்த பின்னர் அங்கு பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

விடுதலை அமைப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினர். (உ-10-6-5)

## பேச்சின்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைந்தன? ஏனைய அரசியல் கட்சிகளின் அபிப்பிராயத்தை அறிந்து கொள்ளும் திட்டம் எந்த அளவில் உள்ளது?

இப்படி செய்தியாளர் திரு அமிர்தலிங்கத்தைக் கேட்டார்.

அதற்கு பதிலளிக்கையில்,

'பேச்சுக்களில் காணப்படும் முன்னேற்றத்தைத் தொடர்ந்துதான் ஏனைய கட்சிகளின் அபிப்பிராயங்களை நாம் நாடுவோம். அதுவரை நாம் இதுபற்றி முடிவு எடுக்கும் நிலையில் இல்லை''— என்று திரு அமிர்தலிங்கம் சொன்னார்.

இன்று மாலை 5-30 மணிக்கு ஜனாதிபதியுடன் இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் நடைபெறும் என்றும் திரு. அமிர்தலிங்கம் சொன்னார்.

முதற்கட்டப் பேச்சுக்கள் நேற்றுக்காலை இடம் பெற்றன.

பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் காலை 10 மணியளவில் ஆரம்பமான பேச்சுக்கள் இரண்டரை மணித்தியாலங்கள் வரையில் நீடித்தன; (அ-எ)

## அறவழி பாடசாலைகள் ஆரம்பம்

சாவகச்சேரி ஜூலை 14

அறவழிப் போராட்டக் குழுவினர் மேலும் இரு அறவழிப் பாடசாலைகளை இம் மாதம் முதல் ஆரம்பித்துள்ளனர்.

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத்திட்டத்திலும் கொயிலாக்கண்டியிலுமே இப் பாடசாலைகள் திறக்கப்பட்டுள்ளன.

ஆசிரியைகளை நியமித்ததுடன் பாடசாலைக்கான உபகரணங்களையும் இயக்குநர் சபை வழங்கி உள்ளது

இக்குழுவினரால் நடத்தப்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை இத்துடன் 27 ஆக உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடக் கூடியதாகும். (உ-31)

## 3 பிள்ளைகளின் தாய் சிருடையினரால் மானபங்கம்

### வவுனியாவில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 14

மூன்று குழந்தைகளின் தாய் ஒருத்தி சிருடையினரால் மானபங்கப் படுத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் கடந்த சனிக்கிழமை வவுனியாவில் இடம்பெற்றது.

ஞாயிறு மாலை 4.30 மணியளவில் சிருடையினர் சிலர் பெரியார் குளம், பூந்தோட்டப் பகுதியில் தேடுதலில் ஈடுபட்டிருந்தனர்.

அச்சமயம் இரண்டு பேர், வீடு ஒன்றினுள் நுழைந்து, இளம் பெண்ணை மானபங்கப் படுத்தினராம்.

இப்பெண் தற்சமயம் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். (உ-எ)

## எம்பரஸ் ஹோட்டல் குண்டுவீச்சு

## 14 பேர் கைதாகினர்

கொழும்பு, ஜூலை 14

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் கொழும்பில் தங்கியுள்ள ஹோட்டல் எம்பரஸுக்கு குண்டு வீசப்பட்ட சம்பவம் தொடர்பாக 14 பேரை பொலீஸார் கைதுசெய்தனர்.

இவர்களில் 8பேர் தமிழர்கள் 6 பேர் சிங்களவர்.

தமிழர் புறம்பாகவும் சிங்களவர் புறம்பாகவும் கொள்ளுப்பிட்டி பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

பொலீஸ் விசாரணை தொடர்ந்து நடைபெறுகின்றது. (-எ-2))

## ஹோட்டல் குண்டுவீச்சு குறித்து அமிர் கருத்து

கொழும்பு, ஜூலை 14

கூட்டணித் தலைவர்கள் தங்கியுள்ள ஹோட்டல் எம்பரஸுக்கு அண்மையில் குண்டு வீசப்பட்டது பற்றி கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் கருத்து வெளியிட்டார்.

கேள்வி; ஹோட்டலுக்குக் குண்டு வீசப்பட்டது குறித்து என்ன கருதுகின்றீர்கள்?

அமிர்: இது எமக்கு பழக்கப்பட்ட ஒன்று. 1984இலும் இதுபோன்ற முயற்சி நடந்தது. எம்மைப் பயமுறுத்த எடுக்கப்பட்ட திட்டமிட்ட முயற்சி இது.

ஆயிரக்கணக்கில் எமது மக்கள் கொல்லப்படுகின்றனர். அந்த நேரத்தில் இது எமக்கு எதையும் செய்துவிடப் போவது இல்லை.

தெற்கில் உள்ளவர்கள் தான் இதற்குப் பொறுப்பாக இருக்கவேண்டும்.

இப்படி திரு. அமிர்தலிங்கம் சொன்னார். (உ-எ-2)

## மன்னாரில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டியாக பின்வாங்கியது.

எதிர்த் தாக்குதல்களின் விளைவாக ஏனைய விமானங்களும் பின்வாங்கின.

### கவச வாகனம் சிதைந்தது

இதன் மத்தியில் எமது சிலிண்டர் தாக்குதல் ஒன்றுக்கு ஒரு கவச வாகனம் சிக்குண்டு சிதைந்ததில் அதில் வந்த அனைவரும் கொல்லப்பட்டனர் இன்னொரு வாகனத்தில் ஆட்லறி மோட்டார் ஏற்றி வந்தபோது அதன்மீது எம்மவர்கள் ரொக்கட் லோஞ்சர் மூலம் தாக்கியதில் ஆட்லறி மோட்டார் பெருஞ் சிதைவுக்கு உள்ளானது.

இத்தாக்குதலின்போது இராணுவத் தரப்பில் பெருந் தொகையானோர் கொல்லப்பட்டனர். பெருமளவினர் காயங்களுக்கு ஆளாகினர்.

எமது தரப்பில் மூவர் காயங்களுக்கு உள்ளாகினர்.

எம்மை முற்றுகையிட முயன்ற ராணுவத்தினர் தற்போது எமது சுற்றிவளைப்பிலிருந்து விடுபட ... சார்கள்.

இம் முற்றுகையின் போது அடம்பனிலுள்ள பல தமிழ்பேசும் முஸ்லீம் மக்களுக்கு சொந்தமான கடைகள் இராணுவத்தினரால் எரிக்கப்பட்டன.

அத்துடன் பொம்மர் விமானங்கள் குண்டு வீசியதில் தமிழருக்குச் சொந்தமான சுமார் 25 வீடுகள் சேதத்திற்கு உள்ளாகின. இதனால் பொதுமக்களில் பலர் இறந்தும், காயங்களுக்கு உள்ளாகியும் உள்ளனர்.

—இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

## புலிகள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களும் பின்வாங்கின

இராணுவத்தினர் உயிரிழப்புகளுக்கும், காயங்களுக்கும் ஆளாகினர்.

இத்தாக்குதலில் எமது தரப்பில் இழப்பு ஏதும் இல்லை.

பின்வாங்கிய இராணுவம் முகாம் வழியில் எதிர்ப்பட்ட பொதுமக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மூவர் கொல்லப்பட்டனர். (உ)

## விளையாட்டரங்கு

## கொக்குவில் இந்து அணி இறுதியாட்டத்திற்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஜூலை14

யாழ் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெறு வரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரை இறுதி ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்று இறுதி ஆட்டத்தில் கலந்து கொள்வதற்குத் தகுதி பெற்றது.

நேற்று முன் தினம் நடைபெற்ற அரை இறுதிப் போட்டியில் கொக்குவில் இந்து அணி சென் ஜோன்ஸ் கல்லூரி அணியை முதல்இன்னிங்ஸ் வித்தியாசத்தில் வென்றது

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் சென் ஜோன்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

அவ் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 76 ஓட்டங்களைப் பெற்றது

எம் ஜெகநாதன் 27 ஓட்டங்களைப்பெற்றார்.

பி செந்தில்வேல்,எஸ். ஐங்கரலிங்கம், பி. ராஜா ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து ஆடிய கொக்குவில் இந்து அணி 100 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

வி இ-ங்காதீபன்,எம் சஞ்சீவன் பி ஜெயராகவன் ஆகியோர் முறையே 21, 19, 18 ஓட்டங்களையும் எல் நவின் ஆட்டமிழக்காமல் 14 ஓட்டங்களையும் பெற்றனர்.

இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய சென் ஜோன்ஸ் அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 84 ஓட்டங்களைப் பெற்ற போது ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

எஸ். சுதாகர் ஆட்டமிழக்காமல் 37 ஓட்டங்களைப் பெற்றார்.

பி செந்தில்வேல் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

தொடர்ந்து ஆடிய கொக்குவில் இந்து அணி ஆட்ட நேர முடிவின் போது 2 விக்கெட்டுக்களை இழந்து 34 ஓட்டங்களைப் பெற்றது. (உ-7)

## சென். சாள்ஸ் அணிக்கு மூன்று வெற்றிகள்

யாழ்ப்பாணம், ஜூலை14

யாழ்ப்பாணம் சென். சாள்ஸ் மகாவித்தியாலய 17 வயதுப் பிரிவு அணிக்கு தொடர்ந்து மூன்றாவது வெற்றி கிடைத்துள்ளது.

கல்வித் திணைக்களம் நடத்தும் யாழ்மாவட்ட பாடசாலைகளுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியிலேயே இந்த வெற்றி கிடைத்துள்ளது.

இந்த அணி யாழ்வைத்தீஸ்வரா வித்தியாலய அணிக்கு எதிரான போட்டியில் 8-0 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்றது.

அதன்பின்னர் நடைபெற்ற யாழ் ஒஸ்மானியாக் கல்லூரி அணிக்கு எதிரான போட்டியில் 3 - 0 என்ற கோல் அடிப்படையிலும் —

கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கெதிரான போட்டியில் 3—1 என்ற கோல் அடிப்படையிலும் சென் சாள்ஸ் அணி பெற்றது (உ-7)

## ஆசிரிய கலாசாலை விளையாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 14

கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி கடந்த வியாழக்கிழமை கலாசாலை மைதானத்தில் நடைபெற்றது.

அதிபர் செல்வி. சபின்னப்பு கலாசாலைக் கொடியை ஏற்றி வைபவத்தை ஆரம்பித்து வைத்தார். இந்த இல்ல விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சியில் பலாலி ஆசிரிய கலாசாலை அதிபர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

விளையாட்டுப் போட்டியில் தொடர்ந்து மூன்றாவது தடவையாக சுவர்ணதிலகம் முதலாவது இடத்துக்கான சம்பியன் கேடயத்தைப் பெற்றுக் கொண்டது. இல்ல அலங்காரம், அணிநடை என்பவற்றிலும் தொடர்ந்து முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

இரண்டாம், மூன்றும் இடங்களை முறையே அருண இல்லமும், இராதர் இல்லமும் பெற்றுக் கொண்டன.

சிறந்த விளையாட்டு வீரனாக ஐனுப். எம். ஏ. ஸலாம், சிறந்த விளையாட்டு வீராங்கனையாகத் திருமதி. நா ஜெகராதினம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்

## திருமலையில் சூடு

### 3 பேருக்குக் காயம்

திருகோணமலை,ஜூலை14

ஊர்காவல் படை சுட்டதில் திருகோணமலை அன்புவழிபுரத்தில் நகரசுத்தித் தொழிலாளர் குடும்பங்களைச் சேர்ந்த மூவர் காயமடைந்தனர்.

அதைத் தொடர்ந்து அப்பகுதியில் வசித்து வந்த நகரசுத்தித் தொழிலாளர்கள் அனைவரும் பெரியகடைப் பகுதிக்கு இடம்பெயர்ந்துவிட்டனர்.

காயமடைந்தவர்கள் விபரம் வருமாறு;

முருகசன் சேவி, வயது 15 வடமாலை - 10 மாதக் குழந்தை.

லட்சுமி—40வயது.

மூவரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு, ஊர்காவல் படையைச் சேர்ந்தவர்கள் இவர்கள் வீடுகளுக்குள் புகுந்து துப்பாக்கிப்பிரயோகஞ் செய்தனராம்.

அன்புவழிபுரம் பகுதியில் உள்ள நகரசபை விடுதிகளில் இக்குடும்பங்கள் வசித்துவந்தன. (உ-எ-150)

## வேலைக்கு வராதோர் இடங்களை நிரப்ப அரச ஊழியர்கள்

### திருகோணமலையில் நடவடிக்கை

திருகோணமலை,ஜூலை14

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள அரச அலுவலகங்களில் வேலைக்குத் திரும்பாதவர்களினால் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களை மாவட்ட ரீதியில் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை அரசாங்க அதிபர் திரு டி. எம். ஆரியரத்தின இது சம்பந்தமாக மாவட்டத்தில் உள்ள அரச அலுவலகங்களின் தலைவர்களுக்கு சுற்று நிருபம் அனுப்பியுள்ளார்.

ஒவ்வோர் அரச அலுவலகத்திலும், ஊழியர்கள் வராததினால் காலியாக உள்ள பதவிகளுக்கு மாவட்டத்தில் வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட வேண்டும் காலியாக உள்ள இடங்களும் கிடைத்த விண்ணப்பங்கள் பற்றிய விவரங்களும் ஜூலை மாத முடிவிற்குள் அரச அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

இப்படி அரச அதிபர் தனது சுற்று நிருபத்தில் கூறியிருக்கிறார். (உ-எ-150)

## போராளி....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புரட்சி அமைப்பு).

4. பத்மநாபா (ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி).

5 செல்வம் (தமிழ் ஈழ விடுதலை இயக்கம்) (அ-எ-8)

## லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்தில் தமிழர் உண்ணாவிரதம்

லண்டன், ஜூலை 13

வடபகுதித் தமிழ்வாலிபர் ஒருவர் லண்டன் ஹீத்ரோ விமானநிலையத்தில் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளார்.

லண்டன் டைம்ஸ் பத்திரிகை இத்தகவலை வெளியிட்டுள்ளது.

சுரேஷ்குமார் என்பவர் யாழ்ப்பாணவாசி. கடந்த ஜனவரி மாதம் லண்டனில் தஞ்சம்கோரி மேற்கு ஜெர்மனியில் இருந்து சென்றார்.

ஹீத்ரோ விமான நிலையத்தில் இறங்கியவுடன் பிரிட்டிஷ் அதிகாரிகள் போதிய குடிவரவு தஸ்தாவேஜுகள் இல்லாத காரணத்தைக் காட்டி அவரை விமான நிலையத்தில் தடுத்து வைத்தனர்.

ஜனவரியில் இருந்து தொடர்ந்து 5 மாதங்களுக்கு மேலாகத் தடுத்து வைக்கப்பட்ட சுரேஷ்குமார், விசாரணையின்றி வைத்திருப்பதை ஆட்சேபித்து உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கிறார்.

இப்படி லண்டன் டைம்ஸ் அறிவித்துள்ளது. (உ-எ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org